யா/எழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை

# பரிசளிப்பு விழா

2016.10.01



# அதிபர் அறிக்கை

அதிபர் அறிக்கை 2016.10.01

தமிழ் கலாசாரவிழுமியங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட ஏழாலைக் கிராமத்தின் தெற்குத்திசையில் வாழும் மக்களுக்காக கல்வியோடு பண்பாட்டையும் பரப்பவென்ற பெருவிருப்புடன் 1888 ஆம் ஆண்டு பாதிரியார் ஐசாக்போல் அவர்களால் நிறுவப் பட்டதே இப்பாடசாலையாகும். ஆயினும் எமது பாடசாலை விழிசிட்டி என்ற இடத்தில் உள்ளதால் இப்பாடசாலையை விழிசிட்டிப் பாடசாலை என்றே பலரும் அழைக்கின்றனர். இவ்வகையில் நூற்றாண்டைக் கடந்து சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் யா/ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா சிறப்புற மிளிர அருள் சுரக்கும் ஆண்டவனை மனத்திலேதுதித்து... இவ்விழாவின் பிரதமவிருந்தினர் அவர்களே! கௌரவ விருந்தினர் அவர்களே! சிறப்பு விருந்தினர்களே! ஆசியுரை தரவந்துள்ள பெரியோர்களே! வாழ்த்துரைவழங்க வந்திருக்கும் விருந்தினரே! எமது பாடசாலை யின் ஆசிரியர்களே! பெற்றோர்களே! பழையமாணவர்களே! நலன்விரும்பிகளே! சகோதரபாடசாலைஅதிபர்களே!ஆசிரியர்களே! அனவருக்கும் எனது காலை வணக்கம் உரித்தாகட்டும் இன்றையபரிசுத்தின விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.சு. சண்முக குலகுமாரன் (கல்வி முதுமாணி) அவர்கள் ஆசிரியராக தமது கடமையை தொடங்கி அவரின் அனுபவத்தாலும் ஆற்றலாலும் அதிபராகவும் பின் கோட்டக் கல்விப்பணிப்பாளராகவும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார். அவர் உடுவில் கோட்ட மாணவர் அபிவிருத்திகளுக்கும் முன்னெடுப்புக்களுக்கும் சிறந்த வழி காட்டியாக இருந்துள்ளார் அவர் எம்முடன் இவ் விழாவில் கலந்து சிறப்பிப் பதையிட்டு எமது பாடசாலை சமூகம் பெருமைப்படுகிறது. இன்றைய பரிசுத்தின விழாவில் ஆசியுரைவழங்க வந்துள்ள வழங்க வந்துள்ள வண.ஜி. டி. மைனசீலன் அவர்கள் ஏழாலைதெற்கு அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை போதகராக இருந்து நற்போதனைகளால் நல்ல வழிகாட்டியாகச் சேவையாற்றுகின்றார். அவரை யும் நாம் நன்றியுடன் வரவேற்கின்றோம்.. ஆசிரியர்களே. பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே .பழையமாணவர்களே.நலன்விரும்பிகளே உங்கள் அனைவரை யும் பாடசாலை சமூகத்துடன் இணைந்து நன்றியுடன் வரவேற்கின்றேன்.

## மனமகிழ்வு தரும் மாணவச் செல்வங்கள்

எமது பாடசாலை தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை உள்ளது. இங்கு அண்மைக் காலத்தில் மாணவர் தொகையானது அதிகரித்துச் செல்கின்றமை சிறப்பான குறியீடாகவுள்ளது.ஆசிரிய ஆளணிப் பற்றாக் குறை பௌதிகவளப் பற்றாக்குறை இருக்கும் நிலையிலும் எமது பாடசாலையின மீது பெற்றோர் கொண்ட உயர்ந்த நம்பிக்கையே மாணவர் வளம் பேணப்படக் காரணமாகும்இவ்வகையில் தற்போது எம்முடன் 100 மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

## அர்ப்பணிப்பானஆசிரியர்குழாம்

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பின் மூலமே மாணவர்களின் சாதனை வெளிப்படுத்தப்படும். இவ்வகையில் எமது பாடசாலையில் நான்கு பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர்களாக சேவையாற்றுகின்றனர்.

## இணைவும்அகல்வும்

எமது பாடசாலையில் கடந்த 8 வருடங்களாக ஆசிரியராக கடமையாற்றிய திருமதி. பிரியதர்னி சாந்தரூபன் அவர்கள் இவ்வாண்டு தொடக்கம் ஆசிரியஇடமாற்றம் பெற்று யா/ஏழாலை சிறீமுருகன. பாடசாயில் இணைந்து அரும்பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவரின் சேவை வளம் பெற எமது வாழ்த்துக்கள்

## இலவச பாடநூாலை இங்கிதமாக பேணல் செயல் திட்டம்

இலவச பாடப் புத்தகங்களை நல்ல நிலையில் கையாளும் மாணவர்களை ஊக்கப் படுத்தும் முகமாக சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் புத்தகங்களை நல்ல முறையில் கையாண்டு கற்பதை உறுதிப்படுத்தும் செயற்றிட்டம் எமது பாட சாலையில் தொடர்ச்சியாக நமைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் செயற்றிட்டத் திற்குப் பொறுப்பாசிரியராக திருமதி.அனுசியா பிரணவசொரூபன்பணியாற்றுகின்றார்.

## சோதனையும் சாதனையும்

புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவரின் வெளிப்பாடுகள் கணிசமான அளவு தரமானதாக உள்ளதெனினும் தகைமை பெறும் அளவு அதிகரிக்கப்பட வேண்டிய தொன்றாகவேயுள்ளது.. இவ்வகையில் 2015 ஆம் ஆண்டு ஒருவர் தகைமைபெற்றும் நால்வர் 100 இற்கு மேல் புள்ளிகள் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறுவர் மகிழ்களங்கள்

எமது பாடசாலைச் சிறார்களின் உளவிருத்திக்கும் உளமகிழ்விற்கு பல நிகழ்வுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் தரம் - 1 இற்கான கால்கோள் விழா. வருடாந்த மெய்வல்லுநர் போட்டி. புத்தாண்டுப் பொங்கல். சிறுவர் தின விழா. நவராத்திரி விழா. உள நல தினம். ஒளி விழா போன்றவை வருடாவருடம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## ஆளுமை விருத்திக்கான அரங்கு

மாணவரின் பூரணமான ஆளுமைவிருத்திக்கு மன்றச்செயற்பாடுகள் அடிப்படையாக அமைகின்றன அந்த வகையில் எமது பாடசாலையில் பின்வரும் மன்றங்கள்நிறைவாக இயங்கிவிருத்திக்குவழிகாட்டுகின்றன

## இந்துமன்றமும் கிறிஸ்தவ மன்றமும்

. இந்து மன்றமானது நாயன்மார்களின் குருபூசை தினங்களையும், ஆடிப்பிறப்பு, பொங்கல் , நவராத்திரி போன்ற விழாக்களையும் பாடசாலையில் நடைபெறும் ஏனைய விழாக்களையும் சைவ பாரம்பரியங்களுடன்முன்னெடுக்கின்றது.மேலும் வெள்ளிக்கிழ மைகளில் கூட்டுப்பிரார்த்தனையும் நற்சிந்தனையும் இடம் பெறும். இதன் பொறுப்பாசிரியராக திருமதி. இ..நந்தாகரன் அவர்கள் செயற்பட்டுவருகின்றார்.

## மாணவர் மன்றம்

இம்மன்றதின் பொறுப்பாசிரியராக திருமதி. சி அசோக்குமார் செயற்பட்டுவருகின்றார். மாதமொருமுறை மாணவரின் பல்துறை ஆற்றல்களுக்கு களமமைத்துக் கொடுப்பதாக இம் மன்றம் அமைகின்றது

## சுகாதார மன்றம்

சுகாதகர மன்றமானது திருமதி.த.யசோதரனை பொறுப்பாசிரியராகக்கொண்டு சுகாதகர செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது.

பாடசாலையின் அபிவிருத்திக் குழுவானது சமூகமாக இயங்கிவருவது சிறப்பானது ஆயினும் இதன் செயற்பாடுகள் தொடர்பாடல்கள் மேலும்மெருகூட்டப் படவேண்டும். பெற்றோரின் வலுவான பங்குபற்றலே பாடசாலையின் உயர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்குகின்றது தற்போது இதன் செயலாளராக திரு பீலிக்ஸ் மோகன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயலாளராக திருமதி. மே..சிவகுமாரன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

### அவசியமானதேவைகள் :

பாதுகாப்பான நிரந்தர வேலி/சுற்றுமதில் மாடிக் கட்டிடம் கணனிகள் இவ்வாறான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தங்களால் இயன்ற பங்களிப்பை நல்கவேண்டு மென இச் சபையிலே கேட்டுக்கொள்கின்றேன

**நிறைவாக:** பாடசாலையின் உயர்வை கருதி வழிப்படுத்தும் கல்வித் திணைக்களத் தலைவர்களுக்கும். வழிகாட்டும் ஆசிரியஆலோசகர்களுக்கும் எமது நன்றி உரித்தா கட்டும். பாடவிதான. இணைப்பபாடவிதானசெயற்பாடுகளை முன்னெடுத்து நிர்வா கத்திற்கு உதவுகின்றபாடசாலை ஆசிரியர் குழாத்திற்கு எனது நன்றிகள். பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினருக்கும்.பழையமாணவர்களுக்கும்.நலன்விரும்பிகளுக்கும் மனநிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றைய விழாவில் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த அனை வருக்கும்.ஆசியுரை. வாழ்த்துரை வழங்கியோர்க்கும். பரிசுகளை வழங்கியவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இவ்விழா சிறப்புற நடைபெற உதவிய அனை வருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்து மனநிறைவோடு விடை பெறுகின்றேன்.

நன்றி

2016.10.01

அதிபர்.